# ஈஎம்ஐ வழங்குதல், பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர் மற்றும் கார்டின் மீது கடன் வழங்குவது ஆகியவற்றின் விதிமுறைகளும் நிபந்தனைகளும்

1. இந்த வசதி அளிக்கப்படும்போது வழங்கப்படும் தொகை, வட்டி வீதம், காலம், செயல்முறைக் கட்டணம் மற்றும் முன்னதாகவே முடிப்பதற்கான கட்டணம் குறித்து உங்களுக்கு தெரிவிக்கப்படும்.

2. எந்தவொரு பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர் வசதி அல்லது கிரெடிட் கார்டு மீதான கடன் வசதி ஆகியவை ஈஎம்ஐ-யுடன் அல்லது அந்த வசதி இல்லாமல் வழங்கப்படலாம்.

3. இந்த வசதிகளுக்காக ஒரு தனி கணக்கு அமைக்கப்படும். அந்த கணக்கின் எண் உங்களது கார்டு ஸ்டேட்மென்டில் காட்டப்படும், உங்களது ஒவ்வொரு கணக்குகளுக்கும் நீங்களே பணம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம். பல கார்டுகளுக்கான நிலுவை தொகையை ஒரே செக்/டிடி மூலமாக செலுத்தினால் செக்/டிடி-யின் பின் பக்கத்தில் கட்டண பகிர்வு பற்றி தெளிவாக குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் அது உங்களது கணக்குகளில் ஏதாவது ஒன்றுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

4. தெளிவாக குறிப்பிட்டிருந்தால் ஒழிய உங்களது கிரெடிட் கார்டு மீது வழங்கப்பட்ட எந்தவொரு கடனும் உங்களது கிரெடிட் கார்டு லிமிட்டின் ஒரு பகுதியாகும். அவ்வாறு இருந்தால் உங்கள் கார்டின் மீது வாங்கப்பட்ட பிரின்ஸிபல் அமௌன்ட் அளவுக்கு உங்களது கிரெடிட் கார்டின் லிமிட் தடை செய்யப்படும். பெறப்பட்ட கடனிற்கான மாதாந்திர ஈஎம்ஐ/பொருந்தும் தொகை செலுத்தப்பட்ட உடனே/பொழுது நீங்கள் செலுத்திய தொகை அளவுக்கு உங்களுக்கு கிடைக்கக்கூடிய கிரெடிட் லிமிட் அதிகரிக்கப்படும்.

5. உங்களது மாதாந்திர ஸ்டேட்மென்டில் குறிப்பிடப்படும் ‘கிடைக்கக்கூடிய கிரெடிட் லிமிட்’, பேலன்ஸ் டிரான்ஸ்ஃபர், அட்வான்ஸ்கள் மற்றும் உங்களது ஈஎம்ஐ கடன் கணக்கில் செலுத்தப்படாத பிரின்ஸிபல் அமௌன்டை பொருத்தது ஆகும்.

6. தயவுசெய்து கீழே கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு மாதிரி ஸ்டேட்மென்டை பார்க்கவும், அது ஈஎம்ஐ கணக்குகளின் பில்லிங் முறையை நீங்கள் புரிந்துகொள்ள உதவும்.



7. ஒவ்வொரு மாதமும் நீங்கள் செலுத்தவேண்டிய குறைந்தபட்ச கட்டணத்துடன் ஈஎம்ஐ-யும் சேர்க்கப்படும் மற்றும் குறைந்தபட்ச கட்டணம் குறிப்பிட்ட தேதிக்குள் செலுத்தப்படாவிட்டால் அதற்கு அபராதம் விதிக்கப்படும். ஈ எ ம் ஐ ம ற் று ம் குறைந்தபட்ச கட்டணமும் கிரெடிட் கார்டு லிமிட்டின் பகுதியாக இருக்கும். நிலுவையில் உள்ள தொகை (ஈஎம்ஐ உட்பட) கிரெடிட் லிமிட்டை மிஞ்சுவதாக இருந்தால் பொருந்தும் ஓவர் லிமிட் கட்டணங்களை செலுத்த நீங்கள் கடமைப்பட்டவர் ஆவீர்.

8. இந்த சிறப்பு சலுகை தேர்ந்தெடுக்கப்படும் கார்டு மெம்பர்களுக்கு மட்டுமே. கார்டு மெம்பர்கள் ஸ்டேன்டர்டு சார்டட் பேங்க்-கின் ('வங்கி') தனி விருப்பத்தின் அடிப்படையில் தேர்ந் தெடுக்கப்படுவர். வங்கி தனது தனி விருப்பத்தின் படி எதிர்காலத்தில் அதுபோன்ற சலுகைகளை கொண்டு வரலாம் அல்லது கொண்டு வராமல் போகலாம்.

9. கடன் தொகை பொருந்தும் வட்டி, செயல்முறை கட்டணம் மற்றும் (ஈ எ ம் ஐ - யி ல் அடங்கும் வட்டி மீதான) சேவை வரி ஆகியவை உங்களது கிரெடிட் கார்டு ஸ்டேட்மென்டில் பில் செய்யப்படும்.

10. வங்கி எந்த நேரமும் எந்தவொரு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை சேர்க்க, மாற்றியமைக்க, திருத்த, மாற்ற அல்லது அனைத்தையும் வேறுபடுத்த, அல்லது இந்த திட்டத்திற்கு பதிலாக வேறு திட்டத்தை கொண்டுவர, முழுவதையும் அல்லது பகுதியாக மாற்ற, இந்த திட்டத்தை போன்ற அல்லது அல்லாத, அல்லது இவை அனைத்தையும் விலக்கிக்கொள்ளும் உரிமையை தன்னிடம் தக்க வைத்துக்கொள்கிறது.

11. ஸ்டேன்டர்ட் சார்டட் வங்கி, கடனை முன்னதாகவே முடிக்க மற்றும் முந்தைய பேமென்ட்கள் செலுத்தப்படாமல் இருந்தால் நிலுவையில் உள்ள மொத்த தொகையையும் கடனாக கருதப்படுவது மற்றும் அவ்வாறு இருந்தால் கார்டை ரத்து செய்வதற்கான உரிமைகளை தக்க வைத்துக்கொள்கிறது.

12. இந்த திட்டம் காரணமாக இதில் பங்கேற்பவர்களுக்கு ஏற்படும் தேவைகள், இழப்புகள், சேதம், செலவு, உரிமை கோருவது, பங்கேற்பாளர் செலுத்த வேண்டிய, அடங்கும், ஏற்படும் அல்லது செயல்களுக்காக கட்டணங்கள் ஆகியவற்றிற்கு ஸ்டேன்டர்ட் சார்டட் வங்கி பொறுப்பேற்காது.

13. உங்களது ஸ்டேன்டர்ட் சார்டட் வங்கியின் கிரெடிட் கார்டு தவணைகள் செலுத்தப்படுவதற்கு முன்னதாகவே முடிக்கப்பட்டால், அல்லது உங்களது ஈஎம்ஐ கணக்கு முன்னதாகவே நிலுவையில் உள்ள கடன் தொகை, முன்னதாக முடிக்கப்படும் கட்டணங்களுடன் உங்களது கிரெடிட் கார்டின் ஒன்று திரட்டப்பட்ட கடன் தொகையாக கருதப்படும். அதன் பிறகு இதுவே உங்களது கார்டின் கணக்கின் நிலுவை தொகையாக கருதப்படும் மற்றும் அதற்கு பாதி/முழு பேமென்ட் செலுத்தப்படாவிட்டால் (கிரெடிட் கார்டு விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் படி) கட்டணங்கள் விதிக்கப்படும்.

14. இதிலுள்ள எதுவும் கார்டு மெம்பர் ஒப்பந்த விதிமுறைகள் நிபந்தனைகளை தப்பார்த்தம் கொள்ளவோ அல்லது பாதிக்கவோ செய்யாது. இந்த ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள் கார்டு மெம்பர் விதிமுறைகளுக்கு கூடுதலானவையே தவிர அவற்றை செல்லாததாக்குபவை அல்ல.

15. நீங்கள் கடனின் விபரங்கள், வட்டி வீதம், பொருந்தும் கட்டணங்கள், அல்லது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் போன்றவற்றிற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால், நீங்கள் 15 நாட்களுக்குள் வங்கியின் ஹெல்ப் லைனில் தொடர்புகொண்டு கடனை ரத்து செய்ய வேண்டும், அவ்வாறு செயய்த்தவறினால் நீங்கள் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கடனையும் ஒப்புக்கொண்டதாக கருதப்படும், மேலும் டிமாண்ட் டிராஃப்ட் செய்யப்பட்ட தேதியிலிருந்து உங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு வட்டி கட்ட நீங்கள் பொறுப்பானவர் ஆவீர்கள்.

16. அதன்பிறகு தன்னிச்சையாக ரத்து செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது.

17. உங்களது ஈஎம்ஐ கணக்கை முன்னதாகவே முடிவுக்கு கொண்டு வர தயவு செய்து ஹெல்ப் லைன் எண்களில் தொடர்பு கொள்ளவும்.